

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், நேற்று (11.09.2024) சென்னை ஜவஹர்லால் நேரு ஸ்டேடியத்தில் தெற்காசிய தடகள கூட்டமைப்பின் (SAAF) ஜூனியர் தடகள சாம்பியன்ஷிப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பதக்கங்களை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர். அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் மேகநாத ரெட்டி, தமிழ்நாடு தடகள சங்க தலைவர் டபள்யூ.ஐ.தேவாரம் (ஓய்வு) மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், நேற்று (11.09.2024) சென்னை ஜவஹர்லால் நேரு ஸ்டேடியத்தில் தெற்காசிய தடகள கூட்டமைப்பின் (SAAF) ஜூனியர் தடகள சாம்பியன்ஷிப் போட்டியை கொடியேற்றி துவக்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர். அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் மேகநாத ரெட்டி, ஆசிய, தெற்காசிய, இந்திய, தமிழ்நாடு தடகள சங்க நிர்வாகிகள் மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் நேற்று (11.09.2024) சென்னை தரமணி, தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவனத்தில் புதிய படப்பிடிப்பு தளங்கள் அமையவுள்ள இடங்களை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் வே.ராஜாராமன், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு.இரா.வைத்திநாதன், தமிழ்நாடு அரசு எம்ஜிஆர் திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவனத்தின் தலைவர் நடிகர் ராஜேஷ், பொதுப்பணித் துறை மற்றும் செய்தித் துறை அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.




சென்னை மாம்பலம் அஞ்சுகம் மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர் நடன சபாபதிக்கு பள்ளி நிர்வாக திறமை,கல்வியில் மேம்பாட்டுப் பணி உள்ளிட்ட பணிகளை பாராட்டி அவருக்கு நல்லாசிரியர் விருதை பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யா மொழி வழங்கினார்.


